**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | Sessions Case No. 58 of 2020 |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : PW- 12 |
| | | Defence : |
| | : | Court : |

Name : Thirunanam

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of February 2023.**

முதல் விசாரணை : **(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் கற்றறிந்த எதிரிகளின் வழக்கறிஞர்கள் ஆஜர் கற்றறிந்த அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் ஆஜர்)**

நான் தற்போது நொச்சிப்பட்டி கிராம நிர்வாக அலுவலாக பணிபுரிந்து வருகிறேன். 24.02.2019 அன்று ஊத்தங்கரை காவல் நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பானை வந்து 25-ம் தேதி காவல் நிலையம் வருமாறு கூறிப்பிட்டு இருந்தனர். ஒரு குற்ற வழக்கில் சாட்சியாக இருக்க வேண்டும் என்று என்னையும் என் உதவியாளர் கோவிந்தராஜனையும் அழைத்து இருந்தார்கள். 25-ம் தேதி காலை 5.30 மணியளவில் நானும் என் உதவியாளரரும் ஊத்தங்கரை காவல் நிலையம் சென்றேம். நிலையத்தில் காவல் ஆய்வாளள் அவர்கள் வெங்கடேசன் அவர்களிடம் விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது நான் என் உதவியார் கேமராமேன் மற்றும் போலீஸ் இருந்தோம். ஆஜர் 1-ம் எதிரியிடம் விசாரித்தார்கள். வெப்பாலம்பட்டி ஒயின்சாப்பில் இருந்து இரவு 10.00 மணிக்கு தொகையை எடுத்து சென்றார்கள். காட்டேரி வித்தியாமந்தீர் அருகே மது கடை ஊழியர்கள் சென்ற போது அவர்களை தாக்கி பணம் பொருட்கள் எடுத்து வந்ததாக 1-ம் எதிரி கூறினார். பரதனும் வெங்கடேசன் கோழி குஞ்சி வளர்ப்பதன் மூலம் நண்பர்களாக இருந்தார்கள் என்று கூறினார். பருகூர் அருகே ஒப்பந்த வாடியில் இருந்து நாட்டு துப்பாக்கி வாங்கியதாக கூறினார். அந்த துப்பாக்கி பயன்படுத்தி சுட்டதாக கூறினார். எங்களை அழைத்து சென்றால் பயன்படுத்திய பொருளை ஆஜர்படுத்துவதாக கூறினார். காவல் நிலையத்திலேயே 6 முதல் 7 மணி வரை வெங்கடேசன் இடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பிறகு 8 முதல் 9 வரை பரதன் இடம் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் இட்டோம். 25.02.2019 தேதியிட்ட எதிரி வெங்கடேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூத்தில் உள்ள முதல் கையெழுத்து என் உடையது ஆகும். 2-வது கையெழுத்து என் உதவியாளர் கையெழுத்து ஆகும். ஒப்பு கொண்ட அ.சா.அ.2 25.02.2019 தேதியிட்ட எதிரி பரதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என் உடையது ஆகும். 2-வது கையெழுத்து என் உதவியாளர் கையெழுத்து ஆகும். ஒப்பு கொண்ட அ.சா.அ.3. பிறகு வெங்கடேசனை அழைத்து கொண்டு ஊத்தங்கரை கலைஞர் நகரில் உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு சென்றார்கள். அப்போது நான் என் உதவியாளர் எதிரி

வெங்கடேசனும் பரதனும் மற்றும் போலீசாரும் வந்தார்கள், கேமராமேனம் உடன் வந்து இருந்தார். எதிரி வெங்கடேசன் வீட்டு தார்ஸ் வீடு ஆகும். வீட்டிற்குள் அவரே சென்று கோழி கூட்டில் மேல் இருந்த துப்பாக்கி ஆஜர் படுத்தினார். மேலும் 4 பிஸ்டல் குண்டுகளை ஆஜர்படுத்தினார். கோலி குண்ட்டு போன்று 3 குண்டுகளை ஆஜர்படுத்தினார். மேலும் 4 பாக்கெட்டுகள் பிரிக்காத நிலையில் ஆஜர் படுத்தினார். மேற்படி பொருட்களை வெங்கடேசன் ஆய்வாளர்களிடம் கொடுத்தார். அப்போது கேமராமேன் ஆய்வாளர் என்னை விசாரித்தார். பொருட்களை என் முன்னிலையில் காண்பித்தார். அவைகளை பதிவு செய்து என்னிடமும் என் உதவிளார்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். பொருட்களை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். கைபற்றுதல் உள்ள மகஜர் அ.தா.சா.ஆ.4. ஆஜர்படுத்த பட்டுள்ள துப்பாக்கிகளில் குட்டையாக உள்ள துப்பாக்கி எதிரி வெங்கடேசன் வீட்டில் இருந்து ஆஜர்படுத்தியது ஆகும் அது சா.பொ.5 ஆஜர் படுத்தப்பட்டுள்ள 4 பிரிக்கப்படாத டப்பா கொண்ட பாக்கெட் சா.பொ.6 ஆஜர்படுத்தப்பட்டுள்ள 4 பிஸ்டல் குண்டுகளும் 3 கோலி குண்டுகளும் சா.பொ.7 எதிரி வெங்கடேசன் வீட்டில் 10 மணிக்கு முடித்து விட்டு ரெட்டிபட்டி பரதன் வீட்டிற்கு சென்றோம். எதிரி பரதன் வழியை காண்பித்து வந்தார். எதிரி பரதன் வீடு ஓட்டு வீடு ஆகும். நாங்கள் அனைவரும் அங்கும் சென்றோம். எதிரி பரதன் வீட்டின் பரனில் இருந்து நீட்டு நாட்டு துப்பாக்கி கரிமருந்து, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற பவுடர் கோலி குண்டுகள் போன்று 5 குண்டுகள் தேங்காய் நாரு, டி.வி.எஸ் பெரிய இருசக்கரவாகனம் மற்றும் ரூ.25,000/- தொகை அதில் ரூ.500, 200 நோட்டுகள் இருந்தது. ஆஜர்படுத்தினார் ஆய்வாளர் அவைகளை எண்ணிபார்த்தார். மகஜர் தயார் செய்து கையெழுத்து வாங்கினார். நானும் என் உதவியாளரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைபற்று மகஜர் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது இரண்டாவது கையெழுத்து என் உதவியாளர் உடையது ஆகும். கைபற்றுதல் மகஜர் ஆ.தா.சா.5. சுமார் 11.30 மணி அளவில் அங்கு வேலை முடிந்து விட்டது. ஆஜர் படுத்த பட்ட நீட்டு துப்பாக்கி அங்க கைபற்றியது ஆகும். அது சா.பொ.8. மஞ்சள், ஆரஞ்சு நிற பவுடர் உள்ள பட்பா சா.பொ.9. 5 குண்டுகள் சா.பொ.10. தேங்காய் நாரு சா.பொ.11. கரிமருந்து பாக்கெட் சா.பொ.11.

ஆஜர்படுத்தப்பட்ட புகைபடத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளை கைபற்றினார்கள். புகைபடத்தின் தொகுப்பு சா.பொ.12. அங்கிருந்து சென்னப்பநாயக்னுர் பழையூருக்கு இரண்டு எதிரிகளும் வழி காட்டி அழைந்து சென்றார்கள். ஏரிகளுக்கு அருகில் கொண்டம்பட்டி போகும் மண்சாலையில் புளியமரக்கு அருகே ஒரு பேக் ஜிப்பு ஒன்று, சாம்பல், ஸ்டேபலர், கால்குலேட்டர், மூன்று சாவிகள் அடங்கிய கொத்து ஆகியவற்றை இரண்டு எதிர்களும் ஆஜர்படுத்தினார்கள். அந்த இடத்தில் மகசர் தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைபற்று மகசர் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். கைபற்றுதல் மகசர் ஆ.தா.சா.ஆ.6. கால்குலேட்டர் உடைந்த நிலையில் இருந்தது. உடைந்த நிலையில் உள்ள கால்குலேட்டர் சா.பொ.13. ஜிப் சா.பொ.14. ஸ்டேபலர் சா.பொ.15. மூன்று சாவிகள் உடைய கொத்து சா.பொ.16. சாம்பல் பேக் சா.பொ.17. அதன் பிறகு சேர்ந்தே காவல் நிலையம் வந்தோம். அதன் பிறகு மதியம் 2.00 மணிக்கு வருமாறு போலீஸ் கூறி இருந்தார். 2 மணியளவில் நானும் என் உதவியாளர் ஊத்தங்கரை காவல் நிலையம் வந்தோம். அதன் பிறகு மகேந்திரனிடம் வாங்குமூலம் வாங்கினோம். மகேந்திரன் கோழி வளர்ப்பின் மூலமாக நண்பர்கள் ஆனோம். பணம் வாங்கிகொண்டு நாட்டு துப்பாக்கியை கொடுத்தேன் என்று வாக்குமூலம் அளித்தார். நான் உதவிளரரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் 25.02.2019 தேதியிட்ட மகேந்திரன் வாங்கு மூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அது ஆ.தா.சா.ஆ.7. ஆஜர் 1-ம் எதிரி வெங்டேசன் ஆவார். 2-ம் எதிரி பரதன் ஆவார். 3-ம் எதிரி மகேந்திரன் ஆவார். வழக்கு சம்பந்தமாக போலீஸ் என்னை விசாராத்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு சம்மந்தப்பட்ட ஒரு வருடம் பணியாற்றி உள்ளிளோன். அழைப்பானை வந்தாக கூறுவது நீதிமன்றத்தில் இருந்து வந்தா என்றால் காவல் நிலையத்தல் இருந்து வந்தது. 24.02.2019 அன்று இரவு 7 மணி அளவில் எனக்கு அழைப்பானை வந்தது. அழைப்பானை வந்து இருந்தபோதிலும் எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெறமால் அவ்வாறு இயல செல்லாது என்றால் சரிதான் அனுமதி பொற்றுதான் செல்லவேண்டும். எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். இந்த

வழக்கு சம்பந்தமாக சொல்லவேண்டும் என்று எனது உயர் அதிகாரியிடம் நான் அனுமதி கூறவில்லை என்றாலும், அனுமதி கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது உயர் அதிகாரியிடம் சென்னேன். போலீஸ்சார் அழைந்து இருந்த நாள் என் அலுவலக வேலை நாள் என்றால் சரிதான், 24 மணி நேரமும் அலுவலக நேரம் ஆகும். அயர் பணி செல்ல வேண்டும் எனில் எங்கு எப்போது செல்லவேண்டும் என்று பதிவேட்டில் குறிப்பிட்டு உள்ளாதா என்னா என்றால் அது எதும் இல்லை. அழைப்பாணையில் எதிரிகளிடம் குற்ற ஒப்புதலை வாங்குமூலம் குறிப்பிட்டு அழைத்து இருந்தார் என்றால் அவ்வாறு இல்லை, விசாரணைக்காக அழைத்து இருந்தார். அந்த அழைப்பானை எண் குறிப்பிட்டு இருந்தது என்றால் சாட்சியாக குறிப்பிட்டு இருந்தது, அதன் அடிப்படையில் தான் காவல் நிலையம் சென்று இருந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் போலீஸ் எத்தனை போர் இருந்து இருப்பார்கள் என்றால் ஞாபகம் இல்லை, தோரமாக 6, 7 பேர் இருந்து இருப்பார்கள். காவல் நிலையத்தில் எங்களையும் தனிப்பட்ட நபர்கள் இருந்தார்களாக என்றால் இல்லை. காவல் நிலையத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக படாமல் வேறு நபர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சாட்சி கேம்ராமேன் உடன் இருந்தாக கூறுகிறார். காவல் ஆய்வாளர் நான் இருக்கும் நிலையத்தில் வைத்து எதிரிகளிடம் எவ்வளவு நேரம் விசராணை செய்தார் என்றால் தலா நபர்க்கு 1 மணி நேரம் விசாரணை செய்தார். காவல் ஆய்வாளர் கேட்க தலா ஒவ்வொரு எதிரி இடமும் தலா 1 மணிநேரம் விசாரணை செய்தார் என்றால் ஆமாம். போலீஸ் விசாரணை செய்த போது 10 அடி தொலைவில் இருந்தேன். வாக்குமூலத்தினை காவல் பதவு செய்தார்களா என்றால் செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலம் படித்து பார்த்து கையெழுத்து போட்டோனா என்றால் ஆமாம். எதிரிகளிடம் விசாரணை ஒப்புதல் வாக்குமூலம் சுமார் 3 மணி நேரத்துக்குள் செய்து முடிக்கப்பட்டதா என்றால் ஆமாம். விசாரணை செய்த அன்று காலை 9 1/2 மணிக்குள் விசாரணை முடித்து கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து இட ஆவணத்தில் எத்தனை பக்கம் இருந்து என்றால் 5 பக்கம் இருந்து இருக்கும். மொத்தமாக 5 பக்கம் தான் இருந்து இருக்கும் என்றால் வாக்குமூலம் 5 பக்கம் இருந்து இருக்கும். காவல் நிலையத்தில் வைத்து நானும் என் உதவியாளரும் மொத்தமாக எத்தனை கையெழுத்து

போட்டோம் என்றால் 2 கையெழுத்து போட்டோம். காவல் நிலையத்தில் அன்றை தினம் 2 கையெழுத்து தவிற வேறு கையெழுத்து எதும் போடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து 1-ம் எதிரி வீட்டிற்கு சுமார் 2 1/2 கி.மீட்டர் இருந்து இருக்கும். எதிரி வீட்டில் அமைத்து இருந்த கோழி கூட்டின் நீளம், அகலம் என்ன வென்றால் தெரியாது. எத்தனை கூடுகள் அவர் வீட்டில் இருந்தது என்றால் தெரியாது. பொதுவாக கோழி கூடு என்பது 2 x 2 1/2 அடி அளவில் இருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1-ம் எதிரியின் வீட்டில் எவ்வளவு நேரம் இருந்து இருப்போம் என்றால் சுமார் 1/2 மணி நேரம் இருந்திப்போம். 1/2 மணி நேரத்திற்குள் எதிரிரை விசாரத்து பொருளை கைபற்றி இருந்தார்களா என்றால் அங்கு விசாரரிக்க வில்லை போலீஸ் கைபற்றினார். பொருட்களை போலீஸ் நேரடியாகவே எடுத்தார்கள் என்றால் சரியல்ல வெங்கடேசன் எடுத்து கொடுத்ததை கைபற்றினார்கள். மகஜர் ஆவணத்தை எவ்வளவு நேரம் தயார் செய்தார்கள் என்றால் ஒரு 1/4 நேரம் தயார் செய்தார். 1-ம் எதிரி வீட்டில் கைபற்றப்பட்ட அனைத்து பொருட்களும் 10.30 நேரத்திற்குள் முன்பாகவே கைபற்றிவிட்டது. 2-ம் எதிரி வீட்டிற்க்கு எத்தனை மணிக்கு சென்றேம் என்றால் 10 நிமிடத்தில் சென்று விட்டோம். 10 நிமிடம் என்பது காலை 10.20 மணிக்கு அளவில் வாக்கு இருக்கும். 2-ம் எதிரி வீட்டில் 1/2 மணி நேரம் இருந்து இருந்திருக்கும். மேல் சொன்ன சான்று பொருட்களை தவிற வேறு எந்த பொருட்களும் 2-ம் எதிரி வீட்டில் இருந்து கைபற்றபடவில்லை என்றால் எதுவும் கைப்பற்றபடவில்லை. கைப்பற்றப்பட்ட வண்டி எண், கலர் பதிவு எண் தெரியாது ஞாபகம் இல்லை, டி.வி.எஸ். பெரிய வண்டி. ஏரியின் அருகில் இருந்து சுமார் 11.45 அளவில் பொருட்களை கைபற்றினேன். அவைகளை முடித்து காவல் நிலையத்திற்கு சுமார் 12.00 மணி அளவில் வந்து விட்டோம். மதியம் 12.00 வரையில் காவல் ஆய்வாளர் போட்டோ கிராபர் நான் என் உதவியாளர் எதிரிகள் அனைவரும் ஒன்றாகதான் இருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் காவல் நிலையம் பகல் 12 மணிக்கு சென்ற போது அங்கு 3-ம் எதிரி இருந்தார் என்றால் இல்லை. 3-ம் எதிரி நிலையத்திற்கு எப்போது வந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் ஆய்வாளர் 2 மணிக்கு போன் செய்தார். 12 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து வெளியேறிவிட்டோம். 3-ம் எதிரியின் வசிப்பிடம் ஊத்தங்கரையில் இருந்து 50 கிலோ மீட்டர்தொலைவில் உள்ளது என்றால்

அவ்வளவு தூரம் இருக்காது. 2 மணிக்கு காவல் நிலையம் சென்று எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 1 1/2 மணி நேரம் இருந்தோம். மேற்படி 1 1/2 மணிக்கு பிறகு காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு கையெழுத்து போட்டேன். 2-ம் எதிரிகளிடம் இருந்து ரூ.500, 200 நோட்டுகள் கைப்பற்றப்பட்டது. எனது முன்நிலையில் எந்த ஆவணமும் தயார் செய்யப்பட்ட வில்லை என்றாலும் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை என்றாலும் ஏற்கனவே நிலையத்தில் தயார் செய்து வைக்கப்பட்டு இருந்த ஆவணங்களில் போலீஸ்சார் கேட்டு கொண்டது இனங்க கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனக்கு தெரிந்து காவல் நிலையத்தில் நானும் எதிரியும் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் அன்று மாலை சுமார் 3 1/2 மணி அளவில் அங்கு நான் இருந்தேன். 1,2 எதிரிகளிடம் இருந்தது துப்பாக்கிகளை பறிமுதல் செய்யப்பட்டதாக கூறும் சம்பவத்தில் வேறு தனி நபர்களிடம் கையொப்பம் பெறப்பட்டாதா என்றால் இல்லை. நான் கூறுவது எந்த இடத்திலும் பொருட்கள் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து போட்டு உள்ளேன் என்றாலுல் சரியல்ல. உயர் அதிகாரி அனுமதி பெற்று சென்று இருப்பேனா எனில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்து இருப்பேன் என்றாலும் போலீஸ்க்கு உடைந்தையாக சாட்சி அளிக்கிறோன் என்றாலும் சரியால்ல.

**(கற்றறிந்த 3 தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணை அம்சங்களை ஏற்று கொள்வதாக தெரிவித்தார்).**

Sub

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uth